181

# ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்

பிர்மஸ்ரீ
மு. சோமாஸ்கந்தக் குருக்க
அவர்கள் எழுதியது.

159

உ

நல்லவிநாயகர் துணை.

# ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அவ்வை தி. க. சண்முகம் நூலகம். தமிழியல்துறை

இஃது

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான ஆதீனபரிபாலன

தர்மகர்த்தாவாகிய

பிரமஸ்ரீ

## மு. சோமாஸ்கந்தக் குருக்கள்

அவர்களால் எழுதி,

கொழும்பு

"வீரகேசரி" அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

சகாப்தம் ௧௮௭௨. விரோதி-ஹு ஆடி-மீ

1949

# அட்டவணை.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| நூன்முகம் | .... | .... | 1 |
| சாற்று கவிகள் | .... | .... | 9 |
| ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம் | .... | .... | 13 |
| 2-வது வியாசர் அருச்சித்தபடலம் | | .... | 19 |
| குளக்கோட்டு மகாராசன் வழிபாட்டுப்படலம் | | .... | 25 |
| ஸ்ரீ பராக்ரமபாகு மகராசன் வழிபாட்டுப்படலம் | | | 35 |
| தாமிர சாசனப்படி | .... | .... | 36 |
| கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மகாராசன் வழிபாட்டுப்படலம் | | | 37 |
| பிர்மஸ்ரீ குமாரஸ்வாமிக் குருக்கள் பூசித்தபடலம் | | | 38 |
| நவதுதி .... | .... | .... | 41 |

சிவமயம்.

# இரண்டாவது பதிப்பு.

இந்த ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரமானது சரித்திரப் பிரசித்தமானதும் சரித்திர தொடர்ச்சிகளுள்ளதுமாக விளங்குகின்றது. சரித்திரப் பேராசிரியர்களின் தெளிவான மேற்கோள்களோடு வெளிவந்த நூல்களில் கூறியிருக்கும் வருஷம் மாஸம் திகதிகளையும் தேவஸ்தானத்திலுள்ள ஏட்டுப்பிரதிகளை பன்முறை ஆராய்ந்து கிடைத்தவைகளையும் பிரசுரித்தலவஸியமென உணர்ந்து வெளிப்படுத்துகிறோம்.

இலங்கைக்கு முதன் முதலாக வந்த ஸ்ரீ விஜயராஜா தனது இராஜதானியின் நான்கு வாசல்களிலும் சிவாலயங்களைத் திருத்தியமைத்தாரென பழய இலங்கைச் சரித்திரம் (அமெரிக்கன் மிஷன்பதிப்பு) கூறுகிறது. (B. C. 483 முதல் 445 க்குள்).

முதலாவது ஸ்ரீ பராக்ரமபாகு (1160 A. D.)வும் ஸ்ரீ கஜபாகு (179 A. D.) முதலிய அரசர்களும் ஸ்ரீ பராக்ரமபாகு 6-வது (1448 A. D.) 9-வது ஸ்ரீ பராக்ரமபாகு (1517 A. D.) முதலிய ராஜாக்கள் தங்களுடைய அரண்மனைகளுக்கு நம்பிமார்களாகிய குருமார்களையும் குருசிரேஷ்டர்களையும் அழைத்து பஞ்சயோஜனை விஸ்தாரமுள்ள இடத்தை அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள்.

பறங்கியர், ஒல்லாந்தர், கோவிலைச் சேதப்படுத்தினும் தேவாலயத்திற்குரிய நிலங்களைத் தோம்பு பதிந்திருக்கிறார்கள்.

கி. பி. 1796-ல் Robert Andrews அவர்கள் ஈஸ்ட் இந்திய கம்பெனியின் பிரதிநிதியாக இங்குவந்து கோவிலுக்குரிய நிலங்களை முறைப்படி பதிந்திருக்கிறார்.

Captain Johnston என்னும் அதிகாரி 1820 கோவிலுக்குரிய 64 கிராமங்களின் விபரங்களையும் சன்னஸ், செப்புப்பட்டையம் முதலிய ஆதாரங்களையும்தான் பதிவித்து தருவதாக வாங்கிக் கொழும்புக்குக்கொண்டுபோனதாகவும் பின் திருப்பியே கொடுக்கவில்லை யெனவும் அத்தாக்ஷிகளுண்டு.

கலியுகாரம்பத்திலிருந்து பஞ்சபாண்டவர்களிலொருவராகிய அர்ஜுனன் பாரியாகிய அல்லிமகாராணிமுத்துக்குளிக்குங்காலங்களில் கிடைக்கும் ஆதாயத்தில் ஒரு பங்கை ஸ்ரீ மதுரை மீனாக்ஷிசுந்தரஸ்வாமிக்கும் ஒரு பங்கை ஸ்ரீ வடிவாம்பிகை முன்னநாதஸ்வாமிக்கும் மிகுதி ஒரு பங்கை தனக்குமுரியதாக்கி வந்ததாக கர்ணபரம்பரையான வார்த்தைகளுண்டு.

ஆங்கிலேய வரசாக்ஷி ஆரம்பத்தில் மதராஸ் பிரசிடன்ஸிக்குட்பட்ட சைவசமயக் கோவில்களுக்கு பாகங்கொடுத்திருப்பதாக சில நூல்கள் கூறுகின்றன.

சிவமகாபுராணத்திலுள்ள சநத் குமாரசங்கிதையில் கூறும் அலகேஸ்வரம் என்னும் ஸ்தலமும் தேவி பீடங்கள் 64-ல் கூறுயிருக்கும் ஸ்ரீ லங்காபீடமும் இதுவேயாகும் என அனேக சமய நூலாராய்ந்தோர் கூறுகின்றனர்.

மேற்கூறிய அரசர்களின் சாஸனங்களில் கூறும் 64 கிராமங்களும் 64 தேவிக்குரிய உபசாரங்களையும், 64 தேவி பீடங்களையும் குறிப்பனவாகும்.

இந்த ஸ்தல சம்பந்தமான சரித்திர விபரங்களை அறிஞர்கள் தெரிவித்தால் மறுபதிப்பில் நன்றியறிதலோடு பிரசுரிக்கப்படும். இப்படிக்கு,

**சி. பாலசுப்ரமண்யக் குருக்கள்**

ஆதீன பரிபாலன தர்மகர்த்தா.

ஸ்ரீ முன்னேஸ்வர,
தேவஸ்தானம், 1-9-49.

உ

சிவமயம்.

# நான்முகம்.

## ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரம்.

ஸ்வர்ண பூமியென விளங்கும் இலங்கை நகரின் வட மேல் மாகாணம் சலாபம் டிஸ்றிக் (உதருபிற்றிகல்கோறளை இராஜாவின் வடக்கு எல்லைக் கல்லிற்கு அப்பாற்பட்ட பகுதி.) வடபிடிகல்கோறளை முன்னேஸ்வரம் பற்றில் இஷ்டசித்திப் பிரசாதாநுக்கிரக ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதப்பெருமான் திருக்கோவில்கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரம் விளங்குகின்றது.

பிரமாவினுல் சிருட்டி காலத்தில் லோகோபகாரத்தின் பொருட்டுப் பரார்த்தமாக, சுவாயம்புவேஸ்வரன் என்னுந் திருநாமத்தோடு பிரதிஷ்டை செய்யப்பெற்றதும் வழிபடு வார்க்கு இம்மை மறுமைப் பேறுகளை யளிப்பதும் பிரமகத் தியாதி தோஷங்களை யழிப்பதுமாகிய மகிமைவாய்ந்த இச் சிவக்ஷேத்திரத்தில், தசரத குமாரராகிய ஸ்ரீ ராமஸ்வாமியும் ஸ்ரீ வியாசமுனிவரும் பூசித்துப் பேறுபெற்றதையும் பிற வற்றையும் கற்றுங் கேட்டும் அறிந்த (குளக்கோட்டு மகா ராஜாவின் காலம் கலியுகம் 512 See Simon Casie chetty Ceylon gazeteer) குளக்கோட்டு மகாராசாவி னுலும், இலங்கையரசர்களாகிய (கலியுகம் 4550 கி. பி. 1448 see Mahawansa By W. Geiger, R. A. S. (Ceylon)

Vol 10 No. 35. 1887. Page 118, 119 and in the inscription of the Northern wall of this shrine). ஆருவது பராக்கிரமபாகு மகாராசாவினுலும் அவரவர் அரசு புரியுங் காலங்களில் திருப்பணிகளும் சர்வமான்யங்களும் செய்யப்பெற்று நித்திய நைமித்திகங்கள் சிறப்பாக நடைபெற்றுவருங்காலத்தில், கிறீஸ்துவுக்குப்பின் (1578 கி. பி. see Ceylon Littorel By P. E. Peris Litt B) ஆயிரத்தைஞ்ஞூற்றுத் தொண்ணூற்ருறில் போத்துக்கீசராற் றகர்க்கப்பட்ட திருப்பணிகளை சாலீவாகன சகாப்தம் (*Translation of a Copper Plate Certificate in Tamil* By the high and mighty Ruler of the World who reigns the eight regions and take tributes of the Kings of Angam, Kalingam, Maradam, Mallayalam and from the Kings of the fifty six Kingdoms were granted as alms to the Pagoda of Monasparar situated at Moonasaram, the landed propertys which belongs to the Revenue of the said mighty King as follows:—

| | |
|---|---|
| The paddy field called | Carrawetty four Ammonams. |
| ,, ,, ,, ,, | Illooppadenya six Ammonams. |
| ,, ,, ,, ,, | Peramanantalooway two Ammonams. |
| ,, ,, ,, ,, | Cannengatty Three Ammonams. |
| ,, ,, ,, ,, | Madattuvelly one and a half Ammonams. |
| ,, ,, ,, ,, | paneadee Two Ammonams. |
| ,, ,, ,, ,, | Moodaliar Talooway one and a half Ammonams. |
| ,, ,, ,, ,, | Perappancully Nallanayaken welly Maram welli Sawarara Two Ammonams. |
| ,, ,, ,, ,, | Pallawally four Ammonams. |
| ,, ,, ,, ,, | Callootalooway four Ammonams. |
| ,, ,, ,, ,, | Ollytalooway Two Ammonams. |

Total ammonams thrity-two together with there to belonging Jungles lands hills and ditches in order to endure the charity of Moonasparar till the sun and moon, Thus by order of the King in this copper plate certificate granted on Sunday the 14th August 1675 in the year of Sreemoogam.

(Sgd.) G. Casie Chetty Malabar Translator. A true copy of the translation Sgd. John Macdowall.

Actg Secy to the Board of Rev. & Com.

Copy was issued to M. Somaskanda Kurukkal by E. Rennus, Colombo. 11—9—23. ஆயிரத்தறுநூற்றெழுபத்தைந்து செல்லா நின்ற ஸ்ரீமுக வருஷம் ஆவணிமாதம் பதிஞன்காம் திகதி கீர்த்தி ஸ்ரீராஜ சிங்க மகாராசாவானவன் நிறைவேற்றி முப்பத்திரண்டவண நெல்விளை நிலங்களைத் தாமிரசாசனமாக்கிக் கொடுத்தான். பின் குருக்கள்மார் அவ்விளை நிலத்தில் நின்றும் வரும் வருவாய்கள் பண்டைக்கால முறைபோலக் கிடைக்காமையைக் கண்டு, (Extracts from the Dairy and proceedings of the Hon'ble Fredric North Governor Captain General and Commander-in-chief of the British possessions in the Island of Ceylon.

Vol. 30 B. Fol. 31st Seq.

16th March 1804

Read letter and enclosure from the Board of Revenue and Commerce To His Excelency

The Hon'ble Fredric North Governor and C in C
Colombo.

Sir,

We have the Honour to lay before your Excelency the copy of a letter from the Agent of Revenue at Chilaw with a translation of a grant by the King of Kandy to the pagoda of Munneswaram therein referred to.

By Mr. Campbell's letter your Excelency will observe that the priests of the Pagoda consider themselves' entitled by virtue of this grant nearly 512 Parras of the paddy Revenue of the District which appears to us a claim that cannot be allowed the ground in itself is undefined with regard to the particular land given, which cannot now be ascertained and the priests have consequently marked out the finest fields in the district.

We are of opinion that as the original intention of the grant could only be for the proper maintenance of the Priests attached to the pagoda, it should now receive that interpretation, and therefore we have the honour to propose that Mr. Campbell the Revenue Agent and Mr. Dean the President of the provincial Court of the District should be appointed to confer with the priests of the pagoda and

compromise the matter in such away as to allot a piece of ground as near the Temple as possible sufficient for their decent maintenance and support.

We have the honour to be with the highest respect & C & C.

Sgd. Robert Arbuthnot, President.
A. Wood.
R. Boyd.

Colombo, 12-3-1804.

---

To
Henry,
Secretary to the Board
of Revenue, Colombo.

Sir,

I have the pleasure to forward the petition of the padre of the pagoda at Munneswaram requesting me to cause the paddy Renter of Chilaw to deliver to him the quantity of grain formerly granted (annually) by the King of Kandy to the pagoda. I beg leave to observe for the information of the Board that 512 parrahs is too much to be paid the Renter of Chilaw alone as valuing each parrah at the rate of one Rizdollar it will amount exactly to one fourth of his rent.

The grant was given by the King of Kandy long before the District of Chilaw was ceded to the Dutch at a time when it was full of inhabitance and the whole country in a state of cultivation.

At present it is not one quarter inhabited and not a third of the paddy grounds sown. I therefore take the liberty of recommending to the Board that the Chilaw Renter may be exempted from three fourths of the payments and that if its the intention of Government that the full quantity shall be given to the pagoda that the other paddy Renters of the District may be obliged to pay their quotas in proportion to their respective farms.

I have the honour to be and C.

Sgd. W. E. Campbell,
(Agent of Rev. and Com.) A true copy.

Sgd. John MacdowAld.
(Actg Secy to the Board of Rev. & Com.)

Chilaw, 10—2—1804.

கிறீஸ்துவுக்குப்பின் ஆயிரத்தெண்ணூற்று நாலாம் வருஷம் இலங்கைத் தேசாதிபதியவர்களுக்கு ஓர் விண்ணப் பப் பத்திரமனுப்ப அவர்களவ்வாறு கொடுக்க முடியா தென்று சில பாகத்தை மாத்திரம் ஆலயத்திற் கருகாமையிற் கொடுக்க உத்தேசித்ததாகத் தெரிகின்றது.

அதன்பின் கிறீஸ்துவருஷம் ஆயிரத்தெண்ணூற்றெழு பத்தைந்தாம் ஆண்டில் கொழும்பு நகரவாசரும் எனது பிதா மகரும் ஆகிய பிர்மஸ்ரீ நா. குமாரஸ்வாமிக்குருக்கள் அவர்களால் ஜீர்ணோத்தாரணஞ் செய்யப்பெற்று நித்திய நைமித்திகங்கள் நடைபெற்று விளங்குகின்றன.

இத்தகைய பெருமைகள் மலிந்து பொலிந்து விளங்கப் பெறும் இம் முன்னேஸ்வர க்ஷேத்திர மான்மியத்தைத் தக்ஷிண கைலாச புராணத்தில் நின்றும் மொழி பெயர்த்துச் செந்தமிழ் நடையிற் கத்திய ரூபமாக இயற்றித்தரவேண்டுமென்று, கொழும்பு நகரவாசரும் சிவநேசச்செல்வரும் தர்ம குண பூஷண சிரோரத்தினமும் பிரபுசிகாமணியுமாகிய ஸ்ரீமான். ம. மூத்ததம்பியார் அவர்கள் வேண்டிய வேண்டுகோட்படி ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்தின் பதினைந்தாம் பதினாறும் அத்தியாயங்களிற் கூறப்படும் ஸ்ரீ முன்னேஸ்வர வைபவத்தையும், ஷை தேவஸ்தானத்திலுள்ள ஏட்டுப்பிரதிகளிலுள்ள குளக்கோட்டு மகாராசா முதலிய அரசர்களின் சரித்திரங்களையும், பிர்மஸ்ரீ நா. குமாரஸ்வாமிக் குருக்களவர்களின் சரித்திரத்தையும் சேர்த்து ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி திருவருளினாலச்சிட்டு வெளிப்படுத்தலாயினேன்.

இம்முன்னேஸ்வர மான்மியத்தை எழுதும்போது மனவூக்கத்தோடு அச்சிடுவதற்கேற்றவாறு திருத்தமாய் எழுதிக் கொடுத்த வட்டுக்கோட்டை பிர்மஸ்ரீ சி. பாலசுப்பிரமண்ய சிவாசார்யர் அவர்களுக்கும், ஆங்கில திராவிடாரிய சாத்திர விற்பன்னரும் முன்னேஸ்வரவாசரும் ஆகிய பிர்மஸ்ரீ சிவ. சாம்பசிவக்குருக்கள் அவர்களுக்கும், அச்சிடுங்காலத்தில் ஒப்புநோக்கல் பிழைதிருத்தல் ஆதியவற்றிற்குப் பரோபகார சிந்தையோடு இன்றியமையாப் பெருந் துணையாளராயிருந்த

சைவப் பிரசாரகரும் பண்டித சிகாமணியுமாகிய ஸ்ரீமத். சி. மாணிக்கத் தியாகராஜக் குருக்கள் அவர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றி கூறி ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னை நாதஸ்வாமி திருவருள்புரியும் வண்ணம் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

மு. சோமாஸ்கந்தக் குருக்கள்

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான
காரிய கலாமந்திரம்,
சகாப்தம் *1872* விரோதி-ஸு
ஆடி மீ *28*-ந் திகதி

# சாற்றுகவிகள்.

வட்டுக்கோட்டைவாசரும் முத்தமிழ்வித்துவானுமாகிய

## பிர்மஸ்ரீ. நா. சிவசுப்ரமண்யசிவாசார்யரவர்கள்

சொல்லியவை.

---

சீர்தாங்குமிலங்கையொளிர் முன்னேசப்பேர் செறிதலத்துச்சுவாயம்புவேஸ்வரர்சீர், ஏர்தாங்குசூதமுனிநைமிசர்க்கங்கிசை தக்ஷிணகைலையெனும் புராணம், பார்தாங்கவுரைத்தபடி நன்குதேர்ந்து பண்புநிறை மான்மியத்திற்பரிவுநீடிக், கார்தாங்குமழையாகவமுதமாகக் கற்றவர்க்குநலனுகக்கனியத்தானே. (1)

முக்காலமுறைதேர்ந்து சிவசெஞ்சோதி முதலாகநனி விளங்கமுன்னுரைத்தான், எக்காலமுமழியாப்புகழ் சிறந்தோன் எண்ணில்லாக்கலைஞானி கணிதசிங்கம், தொக்காருங்காஞ்சியினன் கௌசிகப்பேர்துலங்குகோத்திரனுதிசைவயோகி, தக்கார்கொளாதீன தருமகர்த்தன் தருகுமாரஸ்வாமிதனையன்மேலோன். (2)

எண்டிசையுந்தனிவிலக்கும் பரிதியாகி எண்ணில்லாக் கோயில்பலபதிட்டையாதி, விண்டதிருவாகமாதிதந்தை போலவிளக்கு முந்துசாமிகுரு முதல்வன்சீலன், தொண்டுரைத்த முன்னெறிகளனைத்துங் கொண்ட சோமாஸ்கந்தகுரவனருடருணசோதி, கண்டியலநனிவரைந்து கருணை தேங்கிக்காசினி மெய்யறிஞர் மகிழ்கனந்தந்தானே. (3)

---

யாழ்ப்பாணம் பருத்தித்துறை புலோலிநகர்

ஆரியதிராவிடவித்துவான்

## பிர்மஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்

அவர்கள் சொல்லிய

மதிப்புரைக்கவிகள்

—(:)—

முதல் வெண்பா.

முன்னேசர் முன்னை மொழிய வவரருளு
முன்னேசர் சேய்துணையே முன்

## ஆசிரிய விருத்தம்.

பூதலத்தோர் மீதலத்தோர் புகழுமீழப் பொன்னாட்டிலிலங்கிலங்கா புரத்துவாழும், வேதவுருவா முன்னேசுரர்தமேன்மை விளம்புகென நைமிசமா முனிவர்வேண்டப், போதமுள சூதமுனியாரியத்திற் பகன்றபடி செந்தமிழால் வசனமாக்கி, யாதரவொடெவருமுணர்ந்துய்ய வேண்டியச்சிடுவித்தார்தகுதி புகழற்பாற்றே. (1)

## வேறு.

பொன்னுலகோர் பகைவென்றதசரதனும் பூபதிநற்புதல்வனென
மன்னுபுகழிராமபிரானிராவணனை வதைத்தன்பார்மனை வியான
வன்னநிகர்சீதை முதலோரொடு புட்பகத்திவர்ந்தங்ககன்றமீளத்
துன்னுபிரமக்கொலைபின்றொடர்ந்துளது முனிமகனுந்தொடர்பினாலே (2)

தொடருமதுமுன்னேசர்தலத்தயலிற்பின்னிட்டுந்துயர நீங்கித்
தடமணிமானத்திழிந்துசுயம்புவைத்தாழ்ந்தருச்சித்துத்தலங்கடோறும்
சுடரிலிங்கந்தாபித்துப்பூசித்துவரம்பெற்றுத்தொல்லுரெய்திப்
புடவிமுழுதாண்டிருந்தகாதையெவர்களுமறியப்புகன்றதாமே. (3)

வேதங்கள்வகுத்தமுனிபொய்யுரைத்ததபவந்தீர்த்தவிமலமூர்த்தி
போதங்கொளடியார்கள்வேண்டுமுதநயந்தளிக்கும்புதுமையாலே
யேதங்கடவிர்த்தருள்செய்முன்னேசரெனுநாமமெவருமேத்த
வோதங்கொள்கடல்புடைசூழுலகிலருளுருவாகியுறைகின்றாரே. (4)

மன்னுகுளக்கோடனெனுஞ்சோழபூபதிகேட்டுமகிழ்ந்துநூலிற்
பன்னுதிருப்பணிநடத்திநித்தியபூசாதிநிகழ்பான்மைதேர்ந்து
நன்னயமாமானியங்கள்பலவிதித்தான்பிறருமவணயப்பினவ்வா
றுன்னவருமானியங்கள்பலவகுத்தாருறுதிதெரியுண்மையாலே. (5)

நிலவியவத்திருக்கோயில்கிலமாதலான்முன்போனிலவச்செய்து
பலவகையநிபந்தனைகள்புதுப்பித்தார்கொழும்பினுரைபரமசாது
இலகுமறையாறங்கமாகமமுன்னூல்பலவுமினிதுதேர்ந்தார்
திலகநிகர்குமாரசாமிக்குருக்களாம்பெயர்கொள்செல்வர்தாமே (6)

## வேறு.

தருமியிவர்பஞ்சாங்கணித்து முள்ளூந்தகவு பெறப்பலவாண்டாயச்சி லிட்டார்,மருவியசிங்களரோடுதமிழர்பல்லோர்வதிந்துகற்கச்சோதிடர்க் குக்குருவுமானார், குருவிவர்தாந்திரிகநெறிநன்று தேர்ந்தார்கூறுபூசுர ரெனும்பேர்குலவவாழ்ந்தார், பொருவரியபுண்ணியத்தின்பெ[illegible]பேருகப் புராந்தகர்தஞ்சேவடியிற்புகுந்துளாரே. (7)

## வேறு.

இவ்வியல்புற்றோர்மைந்தரெழின்முத்துச்சாமிநாமத்
திவ்வியகுருசிரேட்டர்சிறந்தமுன்னேசர்கோயிற்
செவ்வியநித்தநைமித்தியாதிகள்வழுவாதேற்றி
நவ்வியங்கரத்துவள்ளளற்பதமணுகினாரே. (8)

எங்கணும்புகழைநாட்டுமிவர்தவமுருக்கொண்டன்ன
மங்கலசோமாஸ்கந்தாமகாகுருசிரேட்டரின்னே
துங்கமுன்னேசர்கோயிற்றொன்முறைவழுவாதாற்றிப்
பிங்கலனெனவேசெல்வப்பீடுறுவாழ்கின்றாரே. (9)

தெவ்வர்களஞ்சும்வென்றிச்சீயநேரோதுமின்னோ
ரெவ்வழியெய்தினாலுமேத்துமுன்னேசர்பாதத்
தவ்வழிபாட்டாலெங்குமரும்பயனுறுவரென்னி
னவ்வரனருளுக்கெல்லையளவிடவல்லர்யாரே. (10)

## வேறு.

மன்னுபுகழ்த்தெட்சிணகைலாசமான்மியத்தெடுத்துவகுத்தகாதை
பன்னுறுவோர்கேட்போருட்டெளிகுவோர்வழிபடுவோர்பலரும்வாழி
யுன்னுவினாயகர்வடிவாம்பிகைவேளேமுதலங்கணுறைவாரோடு
முன்னுமுன்னேசுரர்கருணைப்பிரவாகமுழுதுலகின்வாழிவாழி. (11)

திருச்சிற்றம்பலம்.

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

உ
சிவமயம்

# ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்.

## ஸ்ரீ ராமஸ்வாமி அருச்சித்தபடலம்

(ஸ்ரீ தக்ஷிணகைலாய புராணப் பதினைந்தாவது அத்தியாய மொழிபெயர்ப்பு.)

உலக சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவர் முன்னை நாளில் தருப்பைசக்கரத்தைச் செலுத்திப் புண்ணிய பூமியாகக்கண்ட நைமிசாரணியத்தில் வாசஞ்செய்த தவசிரேட்டர்களாகிய சௌனகாதி முனீந்திரர்கள் கோமதியாற்றங் கரையில் ஓர் யாகத்தைச் செய்துகொண்டிருந்தார்கள்.

அவ்வாறிருக்கும் நாளில், சகல வேதாகம புராணங்களை யோதியுணர்ந்த குருபுங்கவராகிய, வியாஸபகவானின் பூரண கருணைபெற்று முற்றத்துறந்த சூதமாமுனிவர் மரவுரி தரித்துச் சடைமுடி துலங்க விபூதி ருத்திராக்ஷம் விளங்க அவ்விடத்தை வந்தடைந்தார். அடைந்த முனிவர் பெருமானைக்கண்ட நைமிசாரணியவாசிகள் விரைந்தெதிர் கொண்டுசென்று பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, உபசாரத்தோடழைத்துவந்து, ஆசனத்திருத்திப் பூசித்து, அனைவருமவரைச் சூழ்ந்திருந்து, "சுவாமீ! அடியேங்கள்

ஈடேறும்பொருட்டு ஸ்ரீ முன்னேஸ்வரக்ஷேத்திர வைபவத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டு''மென்று பிரார்த்திக்ச, அவர்கள்மீது கருணைகொண்ட சூதமாமுனிவர் அவர்களை நோக்கி, பூலோகத்துள்ள சிவகோடிகளுய்வடையும் பொருட்டுப் பிரமதேவரரற் பிரதிஷ்டை செய்து பூசிக்கப்பெற்று, சுவாயம்புவேஸ்வரர் என்னுந் திருநாமத்தோடு திருக்கோயில் கொண்டு மெய்யடியார்க்குப் பார்த்தல், கேட்டல், நினைத்தல் மாத்திரத்தே இட்டசித்திகளை அனுக்கிரகித்து விளங்கும் ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திர வைபவத்தைச் சிரத்தையோடு கேட்பீர்களாக என்று கூறத்தொடங்குகின்றார்.

## திரேதாயுகத்தில்

முனிவர்களே!

(ஸ்ரீ ராமஸ்வாமி ஜனனம் திரேதாயுகத்தில் சென்றது

| | |
|---|---|
| | 431985 |
| 864015 வரவு இருப்பு | |
| துவாபரயுகம் | 864000 |
| 1949 கி. பி. கலியுகம் | 5051 |
| | 1301036 |
| வயது 38-ல் ராவணவதம் | 38 |
| ஆகி | 1300998 |

மைசூர் மகாராஜா அவர்கள் சமுகத்தில் பல சரித்திர சோதிஷ வித்வான்கள் முன் ஸ்ரீ தம்மையா சாஸ்திரிகளால் கலி 5026-ல் நிர்ணயம் செய்து பிரசுரமான கன்னடபாஷையிலுள்ள "ஸ்ரீராம ஜனன நிச்சயம் என்னும் நூலில் பார்க்க)

அயோத்திமாநகரிலிருந்து ஏகசக்கிராதிபதியாயரசாண்ட தசரதச்சக்கிரவர்த்தியின் புத்திரனை ஸ்ரீ ராமபிரான் இலங்கைக்கு வந்து ராவணசங்காரஞ் செய்த

பின் சீதாதேவி, லக்ஷ்மணப்பெருமாள், விபீஷணுழ்வார் ஆதியரோடும் மற்றுஞ் சைனியங்களோடும், அயோத்திமா நகர்க்குச் செல்லும் நோக்கமாகப் புஷ்பகவிமானத்திலேறி ஆகாயமார்க்கமாகப் போகும்பொழுது, கரியநிறமும் சாயா ரூபமுமுடைய பிரமகத்தியானது பின் தொடர்ந்தது.

அப்போது சாயாரூபமான பிரமகத்தியானது, ஸ்ரீ முன் னேஸ்வரக்ஷேத்திரத்தைச் சமீபித்தவுடன் தன்னைவிட்ட கன்று போவதைக்கண்ட ஸ்ரீ ராமபிரான், "ஈதென்ன ஆச் சரியமாயிருக்கின்றதே" என்று ஆராயும்போது, சோதிமய மான உன்னத கோபுரம், தீர்த்தம், நந்தனவனம் முதலான வைகளோடு விளங்குகின்ற ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரத் தைக்கண்டு உள்ளநெக்குருக மெய்ம்மயிர்சிலிர்ப்ப, ஆனந்த அருவி சொரிய, இரண்டு கைகளையுஞ் சிரமேற்கூப்பி, பரிவா ரங்களோடு பூமியிலிறங்கி, சன்னிதானத்தில் விளங்குவதும் பரமார்த்தத்தைக் கொடுப்பதும் பாவத்தைக் கெடுப்பதும், தீமையைத் தடுப்பதுமாகிய சிவதீர்த்தத்தில் சீதாபிராட்டி யார் முதலியவர்களோடு விதிப்படி ஸ்நானம் செய்தவுடன், தமக்குண்டான சரீராரோக்கியத்தையும் உள்ளக்கிளர்ச்சியை யும் கண்டு பேரானந்தங்கொண்டு, ஆனந்தப்பரவசராய் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துத் திருக்கோயிலுட் போய், பரார்த்த முன்னநாதேஸ்வரரையும் வடிவாம்பிகை யையும் சோடசோபசாரங்களினுற் பூசித்துத் துதித்து நமஸ் கரித்து, "பரார்த்தமூர்த்தியே! பாபரகிதரே! ஆனந்த ரூபியே! அனுதரக்ஷகரே! அபீஷ்டவரதரே! என்று இரண்டு கைகளையும் சிரமேற்கூப்பிக் கண்ணீர்வாரக் கருத் தழிந்து பிரார்த்திக்கும்போது, பரமேஸ்வரன் வடிவாம்பிகை யோடு இடபாரூடராய் நந்தி, பிருங்கி முதலிய தேவகணங் கள் சூழக் காட்சி கொடுத்தருளினர்.

ஸ்ரீ ராமபிரான் சீதாபிராட்டியாரோடு பரமேஸ்வரனுடைய திருக்கோலத்தைக்கண்டு ஆனந்தங்கொண்டு, கண்ணீர் பெருக, நாத்தழுதழுக்க, ரோமாஞ்சங்கொள்ளத் தாண்டவம் புரிந்து, "என்னுருயிர்த்தெய்வமே! அடியார்க்கெளியரே! கருணைவாரிதியே! அடியேனைப் பின்தொடர்ந்து வரும் பிரமகத்திதோஷத்தை நீக்கி ஆண்டருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, வேண்டுவார் வேண்டுவதை வரையாது கொடுக்கும் கருணைக்கடலாகிய முன்னேஸ்வரப் பெருமான் திருவுளமகிழ்ந்து, ராமா! உனது பிரமகத்தி தோஷம் நீங்கும் பொருட்டு இவ்விலங்காபுரியில் விளங்கும் சிவக்ஷேத்திரங்களாகிய முன்னேஸ்வரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம் என்னும் மூன்று க்ஷேத்திரங்களிலும் உன்நாமத்தோடு மூன்று சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, பின் சேதுக்கரையிலும் ஓர் சிவ லிங்கப்பிரதிஷ்டை பண்ணி, புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம். வீடு என்னும் நான்கையும் முறையே பெற்று வாழக்கடவாயென்று திருவாய் மலர்ந்தருள, ஆனந்த தாண்டவம் புரிந்து நின்ற ராமபிரான், "சுவாமீ! இம்முன்னேஸ்வர க்ஷேத்திரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யக்கூடிய தலத்தை அருளிச்செய்ய வேண்டு"மென்று பிரார்த்தித்தார்.

முன்னேஸ்வரப் பெருமான் கருணை கூர்ந்து "ராமா! இந்த க்ஷேத்திரத்திற்கு வட திசையில் விளங்கும் மாயவனாற்றுக்கு வடபாகத்தில் (மானாவாரி யென்னும் புண்ணிய க்ஷேத்திர மொன்றுண்டு. அந்த க்ஷேத்திரத்தில் ராமலிங்கம் என்னும் பெயரோடு ஓர் சிவலிங்க பிரதிஷ்டை செய்யக்கடவாய்" என்று அருளிச் செய்து மறைந்தருளினர். அப்போது அன்பானினைவாரதுள்ளக் கமலத்துறைந்தருளும் நிர்மல வஸ்துவாகிய முன்னைநாதப் பெருமான் திருவாக்கைக் கேட்ட ராமபிரான் களிப்படைந்து, முன்னைநாதஸ்

வாமியினலருளிச் செய்யப்பட்ட மானுவாரி க்ஷேத்திரத்தை யடைந்து, விசுவகர்மாவினல் ஆலய நிர்மாணஞ் செய்வித்து, ஆனிமாதமும் பூர்வபக்கத் திருதியைத்திதியும் புதன்கிழமை யும் கூடிய சுப முகூர்த்தத்தில், ராமலிங்கம் என்ற திருநா மம் விளங்க சுவர்ணலிங்கத்தைப் பரிவாரமூர்த்திகளோடு பிரதிஷ்டை செய்து சிவசோதிபாதத்தில் நின்றும் உற்பத்தி யாகிவரும் மாயவனாற்றை வரவழைத்து அபிஷேகாதிபூசை செய்து, பிரார்த்தித்து, அபீஷ்டவரங்களைப் பெற்றுப் பரி வாரங்கள் சூழச் சீதாபிராட்டியாரோடு புஷ்பக விமானத்தி லேறித் திருக்கோணசலத்தை யடைந்து, ஆனிமாதப் பூர்வ பக்கப் பஞ்சமித்திதியும் வெள்ளிக்கிழமையும் கூடிய சுப தினத்தில், * ரௌப்பியலிகமத்தைப் பிரதிஷ்டை செய்து கேதீஸ்வரத்தை யடைந்து ஆனிமாத பூருவபக்கச் சத்தமித் திதியும் ஞாயிற்றுக்கிழமையும் கூடிய சுபமுகூர்த்தத்தில், ரத்தினலிங்கப் பிரதிஷ்டையுஞ் செய்து, சேதுக்கரையடை ந்து ஆனிமாதப் பூர்வபக்கத் தசமித்திதியும் அத்த நக்ஷத்திர மும் புதன்கிழமையும் கூடிய சுபமுகூர்த்ததில் † சைகதலிங்க பிரதிஷ்டை செய்து பிரமகத்தியாதி மகாபாதகங்கள் நீங்கிச் சர்வாபீஷ்டங்களையுமடைந்து அயோத்திமாநகரஞ் சென்று பட்டாபிஷேகம் பெற்று ஏகசக்கிராதிபதியா யரசாண்டிருந்தார்.")

"முனிசிரேஷ்டர்களே! சங்கற்பபூர்வமாக மாயவனாற் றில் ஸ்நானதிகள் முடித்து, ராமலிங்கப்பெருமானைப் பூசித்து, ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரத்தையடைந்து சித்தாமிர்ததீர்த் தம் சிவதீர்த்தம் முதலிய தீர்த்தங்களில் விதிப்படி மூழ்கி, ஸ்ரீ முன்னைநாதஸ்வாமியையும் வடிவாம்பிகையையும் பரிவார

---

* ரௌப்பியம்-வெள்ளி. † சைகதம்-மணல்.

மூர்த்திகளையும் அன்போடு வழிபட்டுப் பிரார்த்திக்கின்றவர்கள், இம்மையில் வேண்டிய இஷ்டசித்திகளைப்பெற்றுப் பெருவாழ்வடைந்து, மறுமையிற் சிவனடிநிழலை அடைவார்கள்."

ஸ்ரீ ராமஸ்வாமி அருச்சித்தபடலம்
முற்றிற்று.

# 2-வது வியாசர் அருச்சித்தபடலம்.

[ஸ்ரீ தக்ஷிணகைலாயபுராணப் பதினாறாவது அத்தியாய மொழிபெயர்ப்பு.]

நைமிசாரணியவாசிகளே! "இன்னும் கேளுங்கள். துவாபரயுகத்தில் தவசிரேட்டர்களாய் விளங்கிய ரிஷீஸ்வரர்கள் இமயமலைச்சாரலில் ஓர் சிறந்த யாகத்தைச்செய்தார்கள். அப்பொழுதவ்விடத்திற்கெழுந்தருளிய வியாசபகவானைக்கண்டு களிப்புற்றுக் கைகூப்பி நமஸ்கரித்து, பாத்தியார்க்கிய பூசைகள் செய்து, உபசரித்துத் துதித்துச் சகல சுகசெய்திகளையும் அளவளாவி விசாரித்தபின், ஓ மகானுபாவரே! உலகத்திற்குக்கர்த்தா அரனா? அல்லது அரியா? என்பதைக் கருணைகூர்ந்தருளிச் செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அவ்விண்ணப்பம் வியாசபகவானுடைய இரண்டு செவியிலும் பழுக்கக்காச்சிய நாராசத்தை ஊடுருவச்செலுத்தியவாறுபோலாகப் பெருங்கோபாவேசத்தராய் வலதுகரத்தைத்தூக்கி, "முனிவர்களே! நீவிர் அற்பஞானமுமில்லாப் புல்லறிவாளர்போலப் பிதற்றுகின்றீர். சர்வலோககர்த்தாவும், சர்வான்மரக்ஷகரும், சதுர்வேதசாரமுமாய் விளங்குபவர் எம்மையாண்டருளும் இறைவனாகிய விஷ்ணுமூர்த்தியே" என்றுகூறக் கேட்டுநின்ற முனிவர்கள் மனம்பதைபதைத்து, இச்சிவதூஷணைசெய்வாரை, எல்லாம்வல்ல இறைவனாகிய விஸ்வநாதஸ்வாமி சன்னிதானத்தில் இவ்வாறு கூறச்செய்வதே தகுதியா" மென எண்ணி, முனிவர் பெருமானைப்பார்த்து, "சுவாமி! தேவரீர்கூறிய இவ்வாக்கியத்தை

ஸ்ரீ காசிக்ஷேத்திரத்திலெழுந்தருளியிருக்கும் விஸ்வநாத ஸ்வாமிசன்னிதானத்திற்கூறிப், பரத்துவத்தைப் புலப்படுத்தவேண்டு" மென்று பிரார்த்திக்க வியாசமுனிவர் அவ்வேண்டு கோட்கிசைந்து இறுமாப்போடு ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தையடைந்து கங்காநதியில் ஸ்நானஞ்செய்து, நெற்றிமுதலாகிய அங்கங்களில் ஊர்த்துவபுண்டரீகாகத்திருமண்சாத்தி, துளபமாலையணிந்து, அரிநாமசங்கீர்த்தன பஜனையோடு சீடர் பல்லாயிரவர் புடைசூழ, விஸ்வநாதஸ்வாமி சன்னிதானத்தையடைந்து, முன்போல வலது கரத்தைத் தலைமேற்றூக்கி, "வேதத்தையன்றி வேறுசாத்திரங்கள் பரத்துவமில்லாதவாறுபோல, விஷ்ணுவையன்றி வேறு தெய்வங்கட்குப் பரத்தும் இல்லை! இல்லை!! இல்லை!!!"யென்று கூறிநின்றார்.

அப்போது விசுவநாதஸ்வாமிசன்னிதானத்தில் வீற்றிருந்த நந்திகேஸ்வரப்பெருமான், வியாசபகவான் சிறிதும் அச்சமற்றுக்கூறிய சிவதூஷணையைக் கேட்டு உள்ளங்கொதித்து, "விஷ்ணுபரங்கூறத் தலைமேல் தூக்கிக்காட்டியகரம் லோகநாயகனாகிய பரமசிவனது ஆக்ஞையினால் உயர்த்தியவாறே நிற்குக" என்று சபித்தருளினார். சபித்தவாறே வியாசபகவானின் கரம் ஸ்தம்பித்துநின்றது.

அத்தருணம், விஷ்ணுமூர்த்தி விஸ்வநாதஸ்வாமி சன்னிதானத்திற் பிரசன்னமாகி வியாசரைப்பாத்து "ஓ வியாஸனே! நாம்சொல்வதை நன்குகேள்! உலகத்துக்குக்கர்த்தா நான் எனக்குக்கர்த்தா பரமேஸ்வரன் அப்பரமேஸ்வரனுக்கு மேலானொருவமில்லை இதையுறுதியாகவுணர்தி" யென்று ஸ்ரீ பஞ்சாக்ஷரமஹாமந்திரோபதேசஞ்செய்து, அநுட்டிக்கும் விதிகளையுங்கற்பித்து, இதுவாயிலாகப் பரமேஸ்வரனைப் பிரார்த்தித்துச் சிவாபவாத தோஷத்தினின்றும் விலகிக் கொள்வாயாக என்று அருளிச்செய்தந்தர்த்தானமாயினார்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல்வரிசை எண்: 1085
நன்கொடை எண்: 1085

இச்சம்பவங்களைக் கண்ணுற்ற சௌனகாதிரிஷீஸ்வரர்கள், சிவனே பரத்துவமுடையார் என்ற மகிழ்ச்சி நிறைந்த மனத்தையுடையாராய், காசிக்ஷேத்திரத்தை விட்டுநீங்கி, அவரவர்களின் வாசஸ்தானங்களுக்குச் சென்றார்கள்.

வியாசமுனிவர், சச்சிதானந்தரும் அத்வைதரும் சங்கரரும் திருபுராந்தகருமாகிய விஸ்வநாதேஸ்வரரைத் தியானித்து, மானதபூசைசெய்தபின், நந்திகேஸ்வரர் சந்நிதியையடைந்து, சர்வோபசார பூசைகளைச்செய்து வழிபட்டு "மகாதேவரே! இச்சிவாபவாத தோஷம் நீங்க உபாயஞ்சொல்லி அனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். நந்தியந்தேவர் மிகவுஞ் சந்தோஷமடைந்து, வியாஸமுனிவரைப் பார்த்து, "முனியே! அதிபாதகங்களைத் தீர்த்தற்குச் சிவலிங்கார்ச்சனை செய்வதேயன்றி வேறொன்றுமில்லை. ஆகையால் சிவலிங்கார்ச்சனை செய்யக்கடவா"யென்று கட்டளையிட்டுப் பின்னும் அருளிச்செய்கின்றார். "எவ்விடங்களிலே செய்த பாபங்களும் புண்ணிய தீர்த்தங்களில் நீங்குகின்றன. புண்ணிய தீர்த்தங்களிலே செய்தபாவங்கள் காசிக்ஷேத்திரத்தில் நீங்குகின்றன. காசிக்ஷேத்திரத்திற் செய்த பாவங்களைப் பூலோகத்திலுள்ள முனிவர் வேதியர் அரசர் முதலியோரால் ஆன்மார்த்தத்தை விரும்பிப் பிரதிஷ்டை செய்தனவாயுள்ள சிவதல யாத்திரையினால் நீக்குதல் கூடாதெனவறிந்த பிரமதேவர் லோகோபகாரமாகக் கருணைகொண்டு, பரார்த்தமாகப் பிரதிஷ்டைசெய்து பூசித்ததாகிய சிவதலமொன்றுண்டு; அது கன்னியா குமரிக்குக்கிழக்கேயும், ராமேஸ்வரத்திற்குத் தெற்கேயும், கதிர்காமத்திற்கு வடமேற்கிலேயும், திரிகோணாசலத்திற்குத் தென்மேற்கிலேயும் இருப்பதும், இலங்கைக்குச் சிரோரத்தினம்போல விளங்குவதும், கைலாசமெனப்பெயர் பூண்டதும், சிவபிரானுக்கதிகபிரீதியுள்ளதும், வழிபடுவார்களுக்கு இஷ்டசித்திகளைக் கொடுப்பதுமாகி

காமராசர்

முன்னேஸ்வரமென்னும் திவ்விய நாமத்தோடு விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த சிவக்ஷேத்திரமொன்றுதான் காசிக்ஷேத்திரத்திற்செய்த பாவங்களைப் போக்குமாதலால் அந்த க்ஷேத்திரத்தையடைந்து மாயவனாற்றில் சங்கற்பபூர்வமாக ஸ்நானம்பண்ணி முன்னைநாதேஸ்வரப் பெருமானைப் பூசித்து, இஷ்டசித்திகளைப் பெற்றுக்கொள்வாயாக" என்று அருளிச்செய்தார்.

இங்ஙனம் அருளிச்செய்யக்கேட்டு நின்ற வியாச முனிவர் "ஸ்வாமி! இலங்காபுரியில் இப்படிப்பட்ட புண்ணிய க்ஷேத்திரமொன்று இருக்கின்றதென்பதைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளக்கேட்டுப் பாவவிமோசனம் பெறுவதாகிய பேற்றைப்பெற்றே"னென்று பேரானந்தமடைந்து, புகழ்ந்து விடைபெற்று, எண்ணிறந்த சீடர் புடைசூழ, ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தினின்றும் புறப்பட்டு, பல சிவதல யாத்திரை செய்துகொண்டு, இலங்காபுரியில் விளங்கும் இஷ்டகாமியானுக்கிரக புண்ணியதலமாகிய முன்னேஸ்வர க்ஷேத்திரத்தையடைந்து, திரிதலப்பராசாதவிமானத்தையும் திருக்கோபுரத்தையும் தரிசனஞ்செய்து, நமஸ்கரித்து, சுவர்ணரசிதமயமான மாடமாளிகை கூடகோபுரங்கள் விளங்குந்திருநகருட் பிரவேசித்து, நகரின் வடதிசையிற் பிரவாகிக்கும் போகமோக்ஷசாதன சொரூபமான மாயவனாற்றையடைந்து ஸ்நானாதிகித்திய கருமங்களை முடித்துச் சர்வாபீஷ்டசித்திகளைப்பெறக் கண்ணுற்று நின்றவெண்ணிறந்த சீடர்களினால் சித்தமுனீஸ்வரர் என்றழைக்கப்பெற்றவராய், மாயவனாற்றங்கரையில் வியாசசித்தமடாலயப் பிரதிஷ்டை பண்ணி, சிலபோதிருந்து சீடர்குழாங்களுக்கு மாயாநததீர்த்த மகிமையையும் முன்னேஸ்வரமான்மியத்தையும் போதித்துப் பேரானந்தத்தோடு முன்னேஸ்வராலயத்தையடைந்து, சிவசன்னிதானத்திலிருக்கும் சிவதீர்த்தத்தையும், தென்கிழக்கி

விருக்கும் விநாயகதீர்த்தத்தையும் தெற்கிலிருக்கும் துவஷ்ட தீர்த்தத்தையும் தென்மேற்கிலிருக்கும் பைரவதீர்த்தத்தையும் மேற்கிலிருக்கும் க்ஷீரகுண்டதீர்த்தத்தையும், வடமேற்கிலிருக்கும் விஷ்ணுதீர்த்தத்தையும், வடக்கிலிருக்கும் துர்க்காதீர்த்தத்தையும் வலம்வந்து கரிசித்து, விதிப்படி ஸ்நானதர்ப்பணாதிகளைச் செய்து, பிரதக்ஷிணம்பண்ணிச் சன்னிதானத்தையடைந்து, தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்து வழிபட்டுக்கொண்டு, ஆலயத்துட் சென்று மூலலிங்கமாகிய முன்னைநாதேஸ்வரப் பெருமானின் திருமஞ்சனத்திற்காகச் சூலபாணியினுலுண்டாக்கப் பெற்றதும், தீர்த்தங்களிலுத்தமோத்தமமானதும், தரிசனமாத்திரத்திற் புருஷார்த்தங்களையும் புத்திரபௌத்திராதிகளையும் இஷ்டசித்திகளையும் அனுக்கிரகிக்ககூடியதும், சகல ரோகதாரித்திரங்களை விலக்கக் கூடியதும், மூல மூர்த்தியினிடப்பாகத்தில் விளங்கிக்கொண்டிருப்பதுமாகிய சித்தாமிர்த தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்து, நல்ல விநாயகர் முதலான மூர்த்திகளைத் தரிசித்து, ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னைநாதஸ்வாமி சன்னிதியையடைந்து தரிசித்து, விதிப்படி பூசித்து, நமஸ்கரித்து ஆனந்த அருவி சொரிய ஸ்தோத்திரம் பண்ணிக் "கருணாநிதியே! கற்பகக்கனியே! கற்றறிவில்லாக் கடையேன் செய்த தூஷணாபவாதத்தைத் திருவுளங்கொள்ளாது கருணைகூர்ந்தனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க, சர்வ சீவதயாபரராகிய ஸ்ரீ முன்னேஸ்வரப் பெருமான் திருவுளமிரங்கி அனுக்கிரகித்து, "அன்பனே! கவலையடையாதே, நீ நமக்கிடதுபாகத்தில் ஆன்மார்த்தமாக வியாசேசன் என்னுந் திருநாமத்தோடு ஓர் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசிக்கக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருள, வியாச முனிவர் பேரானந்தமடைந்து, ஸ்ரீ முன்னேஸ்வரப்பெருமானருளிச்செய்தவாறே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்து,

சிஷ்யர்களுடன் சித்தாமடத்தைபடைந்து சிலகாலம் வசிக்கும் நாளில், சீடர்கள் குருவாகிய வியாசமுனிவரைப்பார்த்து சுவாமீ! இந்த மாபாரததீர்த்த வைபவத்தை அடியேங்களுக்கு அருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, வியாசமுனிவர் கூறுகின்றார். "உத்தம சீடர்களே! முன்னை நாளில் தாருகாவனத்திலிருந்த தவசிரேஷ்டர்களாகிய முனிவர்களும் அவர்கள் பத்தினிமாரும் சர்வலோகநாயகராகிய சிவபிரானையும் விஷ்ணுமூர்த்தியையும் மறந்து கெர்வமடைந்திருந்தபோது, அவர்களை ஆண்டருளக் கருணைகொண்ட பரமசிவன், விஷ்ணுமூர்த்திக்கு நீ மோகினியாகச்சென்று ரிஷிகளின் அகங்காரத்தை அடக்கென்று கட்டளையிட்டு, தாமும் பிக்ஷாடனமூர்த்தியாயெழுந்தருளி, முனிவரையும் அவர் பன்னியரையும் கெர்வம் போக்கி ஆண்டருளியபின், மோகினியுருக்கொண்ட மாயவன் பிக்ஷாடனத்திருக்கோலத்தை மோகித்துத் தன்னைக் கலந்துகொள்ள வேண்டுமென்று யாசிக்க, பரமேசன் அவ்வாறே யனுக்கிரகிக்க, அப்போது ஓர் திருக்குமாரரவதரித்தார்.

அவரே அரிகரபுத்திரர். அவர்வீற்றிருக்குந் திருக்கோயிலிதுவே. இவ்வாறானபின் மாயவன் தன்னை என்றும் இவ்வாறே கலந்திருக்கவேண்டும் என்று பரமேசனைக்கேட்க, "நல்லது இந்த இடத்திலாறுகப் பிரவாகித்துக்கொண்டிரு! நாம் வருடந்தோறும் வரும் ஆவணிமாதப் பூரணையில்வந்து உன்னைக் கலப்போம்" என்று அருளிச்செய்தார்.

அன்றுதொட்டு இவ்வாறானது "மாயவனாறு" என்னும் பெயரோடு பிரவாகித்துக் கொண்டிருக்கிறது. இம்மாயவனாற்றங்கரையிற் செய்யும் எவ்வகைப் புண்ணியங்களும் கோடிபங்கு பலனைத்தரும். உலகில் இதற்குச்சமானமான தீர்த்தம் வேறொன்றுமில்லை. இந்தத் தீர்த்தக்கரையிற்செய்யும்

பிண்டதர்ப்பணம் பிதிர்கட்கு மிகப் பிரீதியாகும். இன்னும் இதன் பெருமைகளெண்ணில்லாதன உண்டெ" ன்று கூறி வியந்து சீடகுழாங்களோடு தமதாச்சிரமத்திற்குச் சென்றனர்.

நைமிசாரணியமுனிவர்களே! இத்தகைப் பெருமை வாய்ந்த ஸ்ரீமுன்னேஸ்வர க்ஷேத்திரவைபவத்தை நந்தியந்தேவர் முதலியவர்களினுற் கூறற்பாலதேயன்றி எம்மாற் கூறுதலரிது என்று சூதபுராணிசர் கூறுவாராயினர்.

வியாசர் அருச்சித்தபடலம்

முற்றிற்று.

---

(ஸ்ரீ தக்ஷிண கைலாயபுராணத்து முன்னேஸ்வரவைபவம் முற்றிற்று)

---

அனுபந்தம்

சூரியகுலோத்துங்க

ஸ்ரீவரராமதேவ சோழமகாராசாவின் குமாரன்

## குளக்கோட்டுமகாராசன் வழிபாட்டுப்படலம்.

கலியுகம் 512

—(0)—

பரதகண்டத்திலே சோழநாட்டிலே திருவாரூரிலே மனுநீதிகண்டசோழன் மரபிலுதித்த வரராமதேவ மகாராஜாவின் புத்திரனை (பாலசிங்க மகாராஜாவாகிய) குளக்கோட்டு மகாராஜாவானவர் கலியப்தம் ஐஞ்ஞூற்

றிப் பன்னிரண்டு நிகழுங் காலத்திலே இலங்காபுரியையடைந்து, ஸ்ரீகோணநாயகர் கோயிற்றிருப்பணிகளையும் நிபந்தனைகளையுமமைத்தபின், முன்னேஸ்வர க்ஷேத்திரமான்மியங்களையறிந்து, அவ்விடத்தையடைந்து, திருப்பணிகளை நடத்தி, சித்தாமிர்த தீர்த்தம், சிவதீர்த்தம் முதலான கூபம் குளம் முதலியவற்றிலுள்ள பாசி முதலியனபோக்கி, படித்துறைகள் முதலான திருப்பணிகளைச் செய்துநிறைவேற்றியபின், சோழ தேசத்திலிருந்து தன் குலகுருவாகிய நீலகண்டசிவாசாரியரையும் அவர் பத்தினியாகிய விசாலாக்ஷி அம்மாளையும் புத்திரர்களையும் வேதவேதாந்த சிவாகம கலைஞான விற்பன்னர்களாகிய பிராமணர்களையும் வரவழைத்து, சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

அதன்பின் நித்திய நைமித்திகங்கள் சிறப்பாக நடந்துவரும் பொருட்டு, நியமித்திருக்கும் தொழும்பாளர்களோடு, இன்னும் வேண்டிய பணிவிடை செய்தற்காகச் சோழ தேசத்தை யடைந்து, மதுரை, தொண்டை மண்டலம், காரைக்கால், திருச்சிராப்பள்ளி, கூடலூர் மருங்கூர் முதலானவூர்களிலிருந்து, பிராமணர், சைவர், செட்டி, வேளாளர், வீரமுட்டி சங்கமர், தாதர், கொல்லர் கன்னர், தட்டார், சிற்பர், தச்சர், யாழ்ப்பாடி, எண்ணெவாணியர், அகம்படியார், முல்லைமடப்பளியார், சங்குமடப்பளியார், சருகுமடப்பளியார் கைக்கோளர், சேணியர், இலைவாணியர், விறகுவெட்டி, தூதர், நாவிதர், வண்ணர், திமிலர், வலைஞர், வருண குலத்தார், குயவர், மறவர், பள்ளர், சாணர், கத்திக்காரர், பறையர், ஆதியோரை ஆராய்ந்தெடுத்தழைத்துக்கொண்டு வந்து, குடியிருக்க நிலங்களைக் கொடுத்துக் குடியிருத்தி, அவ்வவர்க்கு வேண்டியநிபந்தனைகளும் ஏற்படுத்தி, நீர்குறைவில்லாத நெல் விளை நிலங்களையும் வேண்டியவாறு கொடுத்து, மிக்க சிவ பக்தியுடையவராய்ப் பெருவாழ்வடைந்திருந்தார்.

இவ்வாறிருக்கும் நாளில், தொழும்பாளர்கள் செய்யும் பணிவிடைகளில் குறைவேற்படா வண்ணம் செய்வித்தற்கு ஓர் பரிபாலனகர்த்தாவேண்டுமெனத் தீர்மானித்து, மதுரா புரியையடைந்து, சந்திரகுலதிலதமாகிய தனியுண்ணுப்பூபால னென்னும் நீதிநிறைந்த உத்தமசுகுணோத்துங்க மகாராசனை அழைத்துக்கொண்டு வந்து, முன்னேஸ்வர மகாநகரில் அரசுபுரியும்படி முடிசூட்டிச் சகல நீதிகளையும் போதித்து நல்வாழ்வடைந்திருக்கச் செய்தார்.

அதன்பின் முன்னேஸ்வர நகரவாசிகளை அழைத்து "நீங்கள் அத்தர் முன்காப்பணிதல், விழாநடத்தல், விளை விலாறிலொன்றுகொடுத்தல், ஆயம், தீர்வை, கடல்வரத்து முதலானவைகளில் விதித்த வீதப்படி கொடுத்தலாதியவற் றைக் குறைவின்றிச் செய்யவேண்டுமெனக் கற்பித்து, பின்னும் முன்னேஸ்வரப் பெருமானுக்கென்று நாற்காத தூரம் செப்பனிட்டு விட்டிருந்த நெல்விளை நிலங்களை வேளாண்மை செய்யும்பொருட்டு ஊரவர்களிடம் ஒப்பு வித்து, அவ்விளை நிலங்களிலிருந்து வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பால், தயிர், நெய், அரிசிமுதலானவைகளை யும் கொடுக்கும்படி கட்டளையிட்டு, இலுப்பை, புன்னை முத லியவைகளின் பருப்பை உலர்த்திச் சேதமில்லாமல் நெய் யெடுத்து நெய்க்கிணறுகளிலூற்றி அதிகாரிகளிடம் ஒப்பு விக்கும்படி நியமித்து, திருக்கோபுரவாயிலுக்குத்தென்பாகத் தில் கிழக்கருகாக எண்ணைக்கும் நெய்க்கும் கிணறுகளுண் டாக்கி, காவல்பண்ணி, எண்ணை, நெய் குறைவின்றிக் கொடுக்கும்படி எண்ணை அதிகாரிக்குக் கட்டளைபண்ணி, திருநந்தனவனத்தையும் சிறப்பாகச் செய்துவைத்தார்.

இவ்வாறனைத்தையுஞ்செய்து நிறைவேற்றிய தர்ம பூபதியாகிய குளக்கோட்டுமகாராஜாவானவர் முன்னேஸ்

வர வாசிகளையும் தொழும்பாளர்களையும் ஏனையோரையும் அழைத்து, ஓர் மகாசபை கூட்டி, அவ்வவர்க்கேற்றவுபசாரங் கள் செய்தபின் அவர்களைப் பார்த்து "மகாசபையோரே! ஸ்ரீ நல்லவிநாயகப்பெருமான் முன்னேஸ்வரப் பெருமான் வடி வழகியம்மையார் சுந்தரஷண்முகர் முதலானவர்களின் பூரண கிருபா கடாக்ஷத்தால் திருப்பணிசெய்து நிறைவேற்றிய முறையையும், தொழும்பாளர் நியமனத்தையும் அறிந்து கொள்வீர்களாகவென்று விள்ளற்கரிய உள்ளக்களிப்போடு பிள்ளைமொழிபோலத் தெள்ளிதிலுணரத் தெரியப்படுத்தினர்.

பின்னர் குருக்கள்மாரைப்பார்த்து, வேதவித்துக்களே! ஆகம விற்பன்னரே! கலைக்ஞானபண்டிதர்களே! மெஞ்ஞான பூரணர்களே! ஞானபோதகர்களே! நம்பிமார்களே! அடி யேன் சொல்வதை நன்கு சிந்தித்தல்வேண்டுமென்று விண் ணப்பஞ் செய்கின்றார். சுவாமிகளே! மனுதி திரிகரணங் களுக்கு அதீதராயும், சர்வலோக சைதன்யராயும் நிர்மல வஸ்துவாயும் ஆனந்த சொரூபியாயும், நிஷ்களஜோதிமயமா யும், தயாநிதியாயும், சர்வவ்யாபியாயும் விளங்கும் எல்லாம் வல்ல இறைவன் வீற்றிருந்து ஆன்மகோடிகளுக்குப் பூரண கருணைபுரிவான், கோடிக்கணக்கான பொன்னைச் சொரிந்து திருப்பணிசெய்து, திருக்கோவிலைக் கட்டுவதிலும் அதற் கேற்ற நிபந்தனைகளை அமைத்தலிலும் பார்க்க, திருக்கோவி லில் நித்திய நைமித்திகத்தை விதிப்படி செய்தலே சிறந்த புண்ணியமாகும்.

ஆதலால் தினந்தோறும் திருக்கோவிலிலெவ்விடத்தும் பதினோராயிரந் திருவிளக்கேற்றுங்கள். சோதிஸ்வரூபராகிய சிவபெருமானும் அம்மையாரும் எழுந்தருளியிருக்கும் உள் மண்டபத்திற்குப் பசுநெய்யினால் ஆயிரம் நெய்விளக் கேற்றுங்கள். பன்னீரிலே புனுகுமுதலிய வாசனைத் திரவி

யங்களைக் கலந்து எவ்விடத்துந் தெளியுங்கள். இடை யிடையே தசாங்கதூப கலசங்களையிடுங்கள். திவ்விய கணே சர் என்னும் நல்லவிநாயகருக்கு வெள்ளிக்கிண்ணத்தில் ஆறு தளிகையும், சுந்தரஷண்முகர்க்குப் பொற் கிண்ணத்தில் பன்னிருதளிகையும், பைரவர் வீரபத்திரர் ஆதியோர்க்குப் பஞ்சலோக கிண்ணங்களில் நூற்றிருபத்தெட்டுத் தளிகை யும், பிடியமுதுக்காக முன்னூற்றறுபது கிண்ணத்தளிகை யும் வையுங்கள். முன்னைநாதப் பெருமானுக்கும் வடிவழகி யம்மையாருக்கும் சேஞ்சம்பா அரிசியைக் குற்றமற ஆராய்ந் தெடுத்து அமுதுசெய்து நவரத்தினகசித தங்கக் கிண்ணங் களில் அழகுபெறவைத்து, அறுசுவைக் கறிவர்க்கங்களும், பசுப்பால் கலந்த குழம்பும், பணிகாரவகைகளும், கற்கண் டும், வெல்லமும் சர்க்கரையும், கிழங்குவகைகளும், தேனும், கனிவர்க்கங்களும் புத்துருக்கு நெய்யும், இளநீர் முதலிய பானீயவர்க்கங்களும் ஆதியவைகளைச் சன்னிதானத்தில் வைத்து, "எம்பெருமானே! கருணைகூர்ந்து திருவமுது செய்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்து, விண்ணப்பித்து நிவேதித்து, அர்த்தமண்டபத்தில் நின்று விதிப்படி சோட சோபசார பூசைபுரிந்து, மஹாமண்டபமத்தியிலுள்ள அன் னப்பாவாடை மேடையில் வாழை இலைகளைப் பரப்பிச் சம்பா அன்னஞ்சொரிந்து இருபத்தேழுபிடி உண்டை சுற்றி லும் வைத்து, இனிய கறிவர்க்கம் பால் சர்க்கரை தேன் நெய் இவைகளைப்பரப்பிச் சமர்ப்பித்துப் பூசை செய்யுங்கள். விதித்தவற்றில் ஒன்றையுங் குறையாதீர்கள. காலத்தைக் கைவிடாதீர்கள்; கூறியதை மறவாதீர்கள். என்று வேண்டிக் கொண்டு இவ்விதமே தினந்தோறும் திரிகாலங்களிலும் பூசை நடத்தல் வேண்டுமென்று நிபந்தனைசெய்து "நீங்கள் யாவரும் மேலே சொல்லிய விதிகளில் அற்பமேனுந் தவறு வீர்களாகில் ரௌரவாதி நரகத்தில் வீழ்வீர்கள். ஆதலால்

இம்முறைகளைக் குறைவின்றி நடத்துவீர்களாக என்று கூறிய பின்னர் தனியுண்ணுபூபால மகாராசனுக்கும் அனைத்தையும் இப்முறையே நடத்திப் பெருவாழ்வைப் பெறக் கடவாயென்று புத்திபுகட்டி, ஸ்ரீவடிவாம்பிகாசமேத முன்னநாதப்பெருமானைத் தரிசித்து, நமஸ்கரித்து, மனங்களித்து, விடைபெற்றுச் சேனுசுற்றங்களோடு சோழநாட்டை நோக்கிச் செல்வாராயினர்.

பின்பு சந்திரகுலதிலபூபதியாகிய தனியுண்ணுப் பூபால மகாராசன் சூரியகுலரத்தின தர்மதயாளுவாகிய குளக்கோட்டுமகாராசாவின் கட்டளைப்படி முன்னேஸ்வராலயத்தைச் சேர்ந்த பூமிகளை அறுபத்தாறு கிராமங்களாக்கி ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இடுகுறிப்பெயர் காரணப் பெயர்களைவைத்து; சுத்தவேளாளரிலும் அகப்படிவேளாளரிலும் பன்னிருவரைத் தெரிந்து, அவர்களுள் முதலாவதாயுள்ளவருக்கு, 'சந்திரசேகர முதலிப்பட்டங்கட்டி' என்றும், இரண்டாவதாயுள்ளவருக்கு 'பட்டங்கட்டிக் கோருளை' என்றும், ஏனையோருக்கு 'அத்துக் கோருளை' யென்றும் பட்டங்கள் சூட்டி, இவர்களில் முன்னிருவரையும் முன்னேஸ்வரத்திலிருக்கும்படி நியமித்து, கபடாமுதலிய உத்திபோகங்களை அவர்களிடத்தில் ஒப்புவித்து, உட்பிரகாரம் இரண்டாம் பிரகாரம் ஆதிபவைகளில் சுவாமி எழுந்தருளப் பண்ணல் அவர்கள் மரபினரே செய்யவேண்டுமென்று நியமித்தார்.

மற்றப்பதின்மரையும், பம்பளையிலும், பகலப்பிராமணதளுவையிலும், கொக்காவிலிலும், தம்பகலிலும், மாயவனுற்றின் அக்கரையிலுள்ள சருவெலபிலும், பள்ளமையிலும், தகம்பவையிலும், மண்டலானையிலும், மினிக்குளத்திலும், உகம்பிட்டியிலும், வசிக்குமாறு கட்டளையிட்டு, கிராமங்களி

ஞல் கோவிலுக்கு வரவேண்டிய பத்துக்கிரண்டுவீத ஆதா யத்தையும், மீசுவலி நெற்களையும் அறவிடவும், வேளாண் மை நடத்தவும், உற்சவ காலங்களில் வேண்டிய மரம் கம்பு, நெல் பழவகை குருத்து இலைவகை முதலானவைகளை கொண்டுவந்து கொடுக்கும்படி கிராமஜனங்களை ஏவி நடத்த வும், அவர்களுக்கு நியமித்த ஆலயப்பணிகளை நடத்துவிக்க வும் நியமித்தார்.

அங்கம்படி வேளாளரிற் சிலரை எலிவெட்டி, காக்காப் பள்ளி, மாஞவாரி, கரவெட்டி, கணங்கட்டி, இஹலபிராமண தளுவை, மூங்கில்வெட்டுவன், விலத்தவை, மண்டலானை, வீர கொம்பந்தளுவை, பிரப்பங்குளி, ஒல்லித்தளுவை, மருதங் குளம், தித்தக்கடை, என்னுமூர்களிற் குடியிருக்கும்படி நிய மித்து, அவர்களை விசேஷ காலங்களில் பூவகைகள் மாவிலை தென்னம்பூ முதலியவைகளைக் கொடுத்தல், சுவாமி எழுந் தருளப்பண்ணல், சங்கூதல், நெற்குத்தல், திருவிளக்கு தட்டு முட்டு விளக்கல், திருவிளக்கிடுதல், சேவகப்பண்ணை, சந்தன மரைத்தல், கோவில் வெளிமண்டபம், உட்பிரகாரம், இரண் டாம்பிரகாரம் ஆகியவற்றிற்குத் திருவலகிடுதல், திருமெழுக் கிடுதல், தேர்கட்டல், பந்தரமைத்தல் ஆதியவற்றிற்கு நிய மித்தார்.

வீரமுட்டிப் பண்டாரங்களை, முன்னேஸ்வரத்தில் பண் டாரியாமூலை என்னும் இடத்தில் வசிக்கச்செய்து, கோவில் நித்திய பூசாபாத்திரங்கள் விளக்கவும் தூபதீபமேற்றவும் புஷ்பமெடுக்கவும் தேவார திருவாசகம் ஓதவும் விதிப்படி விபூதியமைத்துக்கொடுக்கவும் நியமித்தார்.

சிற்பாசாரிகளை முன்னேஸ்வரத்திற்குத் தக்ஷிண பாகத் தில் குடியிருக்கும்படி நியமித்து திருக்கோவிற்றிருப்பணி

களில் உண்டாகும் பழுதுகளைச்செப்பனிடுமாறு நியமித்தார்.

கொல்லரை, கரவெட்டியிற் சில பகுதியிலும் வங்காதனையிலும் குடியிருக்கும்படி நியமித்து, வாகனம் தேர் முதலியவைகளுக்கு வேண்டிய இரும்புவேலைகளையும், அதிர்வெடிக்கட்டை, தீவர்த்தி, ஆயக்கால், கத்திரி, கோடரி, மண்வெட்டி முதலிய இரும்புவேலைகளையுஞ் செய்துகொடுக்கும்படி நியமித்தார்.

தச்சரை, வங்காதனியில் குடியிருக்கும்படி நியமித்து, திருக்கோவிலுக்கு வேண்டிய மரவேலைகளையும், தேர் வாகனம் முதலியவைகளையுஞ் செய்துகொடுக்கும்படி நியமித்தார்.

கன்னரை, பாலாகுளத்திலும் சலாபத்திலும் குடியிருத்தி, பூசாபாத்திரங்கள் விளக்குகள் முதலியவைகளைப் பழுது பார்த்துக்கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

மேளகாரரையும் தேவதாசிகளையும் முன்னேஸ்வரத்திலும் சலாபத்திலும் சலாபத்திற் சில பகுதிகளிலும் குடியிருத்தி, ஆண்களைத் திருக்கோவிலில் வாத்தியகோஷஞ் செய்யவும், தாசிகளை நடனமிடவும் ஆலத்தியெடுக்கவும் கட்டளையிட்டு, இவர்களுக்கு மற்றையவூர்களில் சர்வமானியமாக நிலங்களையும் கொடுத்தார்.

(இதன் விபரங்களைத் தோம்புகளிற் பார்க்க)

குயவரை, வடகாலமூலையென்ற ஊரிலும் முன்னேஸ்வரத்திலும் குடியிருத்தி, திருப்பணிக்கு வேண்டிய செங்கல், ஓடு, மண்கலசம் முதலியவைகளை வேண்டியவரை செய்து கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

சுண்ணவாணியரை, மரவெளியிற் குடியிருத்தி, உற்சவ காலங்களில் மண்டபம் முதலியவைகளுக்கு வெள்ளையடித்துச் செப்பனிடும்படியும் திருப்பணிக்கு வேண்டிய சுண்ணும்பு கொடுக்கும்படியும் கட்டளையிட்டார்.

கைக்கோளரை, முன்னேஸ்வரத்திலும் சலாபத்திலும் குடியிருக்கச்செய்து, திருவிழாவிற்குக் கொடிச்சீலை, நூல், கயிறு, பரிவட்டம், முதன்மையான குருக்கள்மாருக்கு உடை உத்தரீயம் கும்பவஸ்திரம் சிற்ருடை முதலியவைகளை நெய்து கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

கோடாரிக்காரரை, பஹலகமம் பொன்னுங்காணி ஆகிய இவ்வூர்களில் குடியிருத்தி, இலுப்பை புன்னை எள்ளு ஆமணக்கு தேங்காய் முதலானவைகளிலிருந்து எண்ணெயூற்றிக் கொடுக்கும்படியும், விறகுவெட்டிக் கொடுக்கும்படியும் நியமித்தார்.

திமிலரை, திமிலையிற்குடியிருத்தி, மாயவனுற்றினக்கரைச் சனங்களைக் கூலியின்றி இக்கரைக்குக் கொண்டுவரவும், இக்கரையிலிருந்து அக்கரைக்குக்கொண்டு போகவும், தேரிழுக்க வடம் முதலியவற்றைத் திரித்துக்கொடுக்கவும், தேர் இழுக்கவுங் கட்டளையிட்டார்.

சாணுரை "மணக்குளம்" என்னும் ஊரிற் குடியிருக்கும்படி ஏற்படுத்தி தீவர்த்தி, ஆலவட்டம் முதலியவைகளைத் திருவிழாக் காலங்களில் பிடிக்கவும், தோரணங்கள் கட்டவும் இளநீர், எரிதுரும்பு, திருவலகு, தாம்புக்கயிறு, கிடுகு, குருத்து, தென்னம்பூ முதலியவைகளைக் கொடுக்கவும் கட்டளையிட்டார்.

கருப்பட்டிக்காரரை, இனிகொடவெளியென்னு மூரில் குடியிருத்தி, திருப்பணிக்கு வேண்டிய கருப்பட்டி கடகம் பெட்டி முதலானவைகளைக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

சங்கூதியை, காக்காப்பள்ளியிலும், இலுப்பதனியிலும், சியம்பளாகஸ்வெளியிலும், கருக்குளியிலும், திகாம்வெளியிலும் குடியிருத்தி, கோவில் நித்திய நைமித்திகங்களில் சங்கூதும்படி கட்டளையிட்டார்

மாலைகட்டியை, முன்னேஸ்வரத்திலும் திமிலையிலும் குடியிருக்கச்செய்து, நித்திய நைமித்திகங்களில் மாலைகட்டும்படி கட்டளையிட்டார்.

வண்ணரை நால்வகையாகப் பிரித்து, முங்கந்தளுவையிலும் செம்புக்கட்டியிலும் குடியிருத்தி, கோவிலுக்கு நித்திய பரிவட்டங்கள் போடவும் பாவாடை விரிக்கவும் பந்தஞ் சுற்றவும் வெள்ளைகட்டவும் திருவிளக்கிற்குத் திரிமுதலியன கொடுக்கவும் கட்டளையிட்டார்.

பறையரை, வீரபாண்டியன் என்னுமூரில் குடியிருக்கும்படி நியமித்து, உற்சவ காலங்களில் மேளஞ் சேவிக்கவும், கோவிலில்வரும் விசேஷதினங்களைப் பறைசாற்றி ஊரவர்களுக்கு அறிவிக்கவும் கட்டளையிட்டார்.

குளக்கோட்டு மகாராசன் வழிபாட்டுப்படலம்

முற்றிற்று.

இலங்கா சக்கரவர்த்தியான

# ஆறுவது
# ஸ்ரீ பராக்ரமபாகு மகாராசன் வழிபாட்டுப்படலம்.

சூரியகுல திலதமாகி இலங்காபுரியை அரசுபுரிந்திருந்த ஸ்ரீ சங்கபோதி மகாராசனின் வழித்தோன்றி ஜெயவர்த்தன கோட்டையிலிருந்து ராச்சிய பரிபாலனம் பண்ணிய ஆறுவது ஸ்ரீ பராக்கிரமபாகு சக்கிரவர்த்திஸ்வாமிகள் தமக்குப் பட்டாபிஷேகப்பண்ணி முடிசூட்டியகாலம் முதல் முப்பத்தெட்டாவது ஆண்டு நிகழும் போது ஒரு நாள் மந்திரி பிரதானிகள் புடைசூழ நவரத்தினகசித சிம்மாசனரூடராய் வீற்றிருக்குஞ் சமயத்தில் ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரமான்மியத்தைக் கேட்டு மகிழ்ந்து முன்னைநாதஸ்வாமியைப் பூசிக்கும் சிவாசார்யர்களாகிய நம்பிமார்களை வரவழைத்து முன்னைநாதப்பெருமானின் அற்புதங்களையும் ஆலயச் சிறப்புகளையும் கேட்டறிந்து மகிழ்ந்து திருப்பணிகள் சிலவற்றைச் செய்வித்து, சில கிராமம் பூமிகளை முன்னைநாதஸ்வாமியின் திருநாமக்காணியாகவும், குருக்கள்மாருக்கும் முதன்மைக் குருக்கள்மாருக்கும் சில கிராமபூமிகளைச் சொந்தமாகவும் கொடுத்து நித்தியபூசைக்கு வேண்டிய திரவியங்களை மாதந்தோறும் அரண்மனைக் களஞ்சியத்திலிருந்து கொடுக்கும்படியும் கட்டளையிட்டு, இவற்றின் விபரங்களை, கிறிஸ்துவருஷம் ஆயிரத்துநானூற்றிநாற்பத்தெட்டாம் ஆண்டு சாலிவாகன சகாப்தம் ஆயிரத்துமுன்னூற்றறுபத்தொன்பது செல்லாநின்ற பிரபவ வருஷம் சாந்திரமான ஐப்பசிமாதப் பூர்வபக்

கத் தசமித்திதியும் திருவோண நக்ஷத்திரமுங் கூடிய சுப தினத்திற் * சிலாசாதனம் பண்ணிக்கொடுத்து, ஸ்ரீ முன்னை நாதஸ்வாமியை வழிபட்டு வேண்டிய இட்டசித்திகளைப் பெற்றி வாழ்ந்தார்.

ஸ்ரீ பராக்ரமபாகு மகாராசன் வழிபாட்டுப் படலம் முற்றிற்று.

* கோவில் கற்பக்கிரகத்தில் பார்க்கவும்

---

# தாமிர சாசனப்படி

கலிகால ஸர்வக்ஞ பண்டித பராக்கிரமபாகு மகாராஜா அவர்கள் பரிசுத்த கௌதம புத்த ஹூ 2060 (கலியப்தம் 4519) கி. பி. 1517 இளவரசனுக்கு மின்னலாலுண்டாகிய நோயை நீக்கும் பொருட்டு ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரம் வந்து ஸ்தலத்திலுள்ள ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியை வழிபாடு செய்து நோய் நீங்கப்பெற்று கிழக்கெல்லை கரவிட்ட குளத் துக்குபாயும் மல எல் என்ற நீரோட்டத்தையும் தெற்கெல்லை மாதம்பையின் மூன்று திக்குகளிலும் நிறுத்தப்பட்ட எல் லைக்கற்களையும் மேற்கெல்லை களுதியபொக்கணையின் மான மான் தொட்ட என்ற துறையையும் வடக்கெல்லை முன்னேஸ் வரத்துப்பாயும் நீரோட்டத்தையும் உடைய கிராமங்களை தாமிரசாஸனஞ் செய்தார்.

# இலங்கையையாண்ட
# கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மகாராசன்
# வழிபாட்டுப்படலம்.

கண்டிமாநகரைச்சேர்ந்த குண்டசாலையென்னும் பதியில் அரசுபுரிந்திருந்த, கிர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மகாராஜா அறிஞர் வாயிலாக ஸ்ரீ முன்னேஸ்வரக்ஷேத்திர மான்மியத்தையும் போத்துக்கீசரால் திருக்கோவில் தகர்க்கப்பட்டிருப்பதையும் கேள்வியுற்று மனம் வருந்தி, சோழதேசத்திலிருந்து சிற்பாசாரிகளை வரவழைத்துத் திருப்பணிகளைச் செய்து நித்தியநைமித்திகங்கள் குறைவின்றி நடத்தற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்து, குருக்கள்மாருக்கு முப்பத்திரண்டு அவணநெல்விளை நிலங்களை சாலீவாகன சகாப்தம் ஆயிரத்தறுநூற்றெழுபத்தைந்து செல்லாநின்ற ஸ்ரீமுக வருஷம் ஆவணி மாதம் 14-ந் திகதி கி. பி. 1753-ம் ஆண்டில் தாமிர சாசனம் பண்ணிச் சொந்தமாகக் கொடுத்து, ஸ்ரீ முன்னைநாதஸ்வாமியை வழிபட்டு இட்டசித்திகளைப்பெற்று வாழ்ந்தான்.

கீர்த்தி ஸ்ரீராஜசிங்கமகாராஜன் வழிபாட்டுப்படலம்

முற்றிற்று.

## பிர்மஸ்ரீ

# குமாரஸ்வாமிக்குருக்கள் பூசித்தபடலம்.

சோழநாட்டிலே தொண்டைமண்டலத்திலே காஞ்சிபுரத்திலே ஆதிசைவப்பிராமண குலத்திலே கௌசிக கோத்திரத்திலுதித்த பிர்மஸ்ரீ நாகேந்திரக்குருக்களவர்களின் அருந்தவப் புத்திரனுய் அவதரித்தவரும், இலங்காபுரியின் தலைநகராய் விளங்கும் கொழும்பு நகரில் வசித்தவரும் சகல வேதாகம பிராணேதிகாசங்களை முற்றக்கற்ற மூதறிவாளரும், சோதிட கணித சிற்பசாத்திர மகாவிற்பன்னரும்; பலவித பாஷா பண்டிதரும் ஆகிய பிர்மஸ்ரீ குமாரஸ்வாமிக் குருக்களவர்கள் யாழ்ப்பாணத்தை விவாகஸ்தானமாகக் கொண்டு சுந்தராம்பாள் என்னும் பெண்மணியை மணந்துவாழும் நாளில் இலங்கையிலுள்ள பூர்வீக ஸ்தலங்களுக்கும் நவீன ஸ்தலங்களுக்கும் பிரதிஷ்டா குருவாயும் துவஜா ரோகண குருவாயும் பெருங்கீர்த்தியோடு வாழ்வுற்றிருந்தார்.

அந்நாளில் அருந்தவமோருருவடைந்தாலெனப் பேரழகோருருப் பெற்றுவந்தாலென வேதாகமங்கள் விரும்பியோருருக் கொண்டுவந்தாலென, குலவிய மாநிதியோருருப் பெற்றிவ்வுலகோருவப்ப வந்தாலென்ன மருவுங் கீர்த்தியோங்க வோராண் மகவுதிக்கப்பெற்றுள்ளுவப்ப முத்துச்சாமிக்குருக்கள் என்ன நாமஞ்சூட்டி அன்புகாட்டி அருமைகூட்டி இன்பம் பெருக இனிது வளர்த்து செல்வஞ் சீர்த்தி சிறக்கப்பெற்று மாமனை மகிழவுற்றிடு நாள் ஒப்பில் பேரழகு குடி புகுந்துற்றாலென்ன திடம்பெற்று விளங்குந் திவ்விய சரீரம் நாடொறும் வாடுமிபலையும் மருவிய ரோக வகையை

யும் ஓர்ந்து திவ்வியஸ்தலங்கள் சென்று தெரிசனை புரிந்தும் பல்வகை மருந்தைப் பலவாறுண்டும் மாறுவியல்கண்டு மனம் புழுங்கி என்செய்வோமென எண்ணி வருந்தி ஓரிராத்துயில் கொளும்போதில் சொல்லருஞ் சோதிமய மாந்திருவுருக் கொண்டு காக்ஷிகொடுத்து 'உனக்குண்டாம் நீரிழிவொழிப் போம் நீ யெம் தலத்தை வந்தணை" யென்று வகுத்த வாசகத்தையருளியபோதே அகமிக மகிழ்ந்து விரைந்தெழுந்து விரைமலரடியிணை போற்றி அண்ணலேயடியேம் அகத்தா மெண்ணங்கண்டு கனவிற் காணவந்த அருமறை காணுவரும் பெரும் பொருளே அன்பர்க்கருளும் இன்பவாரிதியே தீவினைமாற்று சஞ்சீவிமருந்தேஎன்றுபலவாறேத்தித்துதித்து, தக்ஷிணகைலை மான்மியத்தெடுத்துச் செப்பிய மகிமையனைத் தையுந் தேர்ந்து எம்பரனினி தெழுந்தருளு முன்னேஸ்வரக்ஷேத்திரமதனைச் சென்றருட்கடலாம் பரமேஸ்வரனையும் வடிவாம்பிகையையும் கண்ணும் மனமும் கண்டு களிப்பவானந்தங்கொண்டு அங்குசிலபோதிருக்க நாளொரு வண்ணமாக நண்ணியநோய்நீங்கல்நோக்கி இத்தகைமகிமை இலங்கிய இத்தலம் இலங்கையில்விளங்கு மிதையோராது தலம்பலசென்று நலம்பெறுநிலையில் வாடியஎன்மனவாட்டந் தவிர்த்து ஆண்ட முன்னைநாதப்பெருமான் வீற்றிருந்தருளும் அரும்பெருங்கோவிலனைத்துங் கிலமாயிருக்கும் நிலை கண்டு மனம்பதைபதைத்துகர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் முதலானவைகளைச் சகாப்தம் ஆயிரத்தெழு நூற்றுத்தொண்ணூற்றெட்டா மாண்டு கற்பணியாகத்தன் பொருள்கொண்டு திருப்பணிசெய்வித்து மகாகும்பாபிஷேகத்தை நடத்தி நித்தியநைமித்தியங்களை விதிப்படிநடைபெறுதற்கேற்ற முறைகளையியற்றி அர்ச்சகாசாரியர் முதலான சகலபணிகாறர்களையுமேற்படுத்தி அவர்களுக்கு வேண்டிய நிபந்தனைகளையுமுண்டாக்கி ஆறுகாலப்பூசையையும் ஏற்

படுத்திஎன்றும் நன்குநடைபெறச்செய்து ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதப்பெருமானுடைய திருவருளால் இட்ட சித்திகளைப்பெற்றுப் பெருவாழ்வடைந்திருந்தார்.

பிர்மஸ்ரீ. குமாரஸ்வாமிக்குருக்கள் பூசித்தபடலம்

முற்றிற்று.

## ஸ்ரீ முன்னேஸ்வரமான்மியம் முற்றிற்று.

உ

சிவமயம்.

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி

# நவதுதி.

விநாயகர் துதி.

வெண்பா

நல்ல விநாயகனே நாடுமுன்னை நாதனருள்
வல்ல கணபதியே மாநிதியே—சொல்லரிய
அட்டசித்தி யீந்தருளு மண்ணலே நாயேனுக்
கிட்டசித்தி யீந்தருள்வா யே.

ஆசிரியவிருத்தம்.

உலகுயி ருய்ய வுலகருள் கடவு
ளுவப்பொடு முன்னைநா ளுருகி
யலகிலன் பார நிறுவிமுற் பூசை
யாற்றிட வமர்ந்தமா மணியே
திலகவா ணுதலார் தேவியோர் பங்கிற்
சேர்ந்திட விளங்குபொன் மணியே
யிலகுமெய் யடியார்க் கருள்செய வளரு
மிசைநிறை மாணிக்க மணியே. (1)

அடியனேன் றனக்கு னடிமல ரிணையை
யனுதின மகமிக மகிழத்
துடியன விடையா ரம்பிகை மருவச்
சுந்தர விடைமிசை யேறிப்
படியுள தீய வினையெலா மகலப்
பரவுபே ரன்புறக் காட்டி
மடியுளேன் றன்னை யாண்டருள் கருணை
வள்ளலே முன்னைநா யகனே. (2)

வேண்டுவார்க் கிட்ட சித்திக ளருளும்
விண்ணவர் பணியுமெய்ப் பொருளே
யீண்டுபோர் புரியு மிராவணன் றனைவீட்
டிராமமூர்த் தியைமுனந் தொடர்ந்து
தீண்டுசேர்ப் பிரம கத்தியை விலக்கித்
தேங்குபே ரருண்மழை பொழிந்து
தூண்டுபே ரொளியாய் விளங்குமா ரமுதே
சுகநிலை காட்டியாண் டருளே. (3)

தேவியோர் பங்கிற் செறிந்திட விளங்குந்
தெய்வமே யென்னுளத் துறையு
மாவியே யமுதே யானந்த நிதியே
யனைத்துயிர் புரந்தரு ளரசே
பாவியேன் படும்பா டதனையிங் கெடுத்துப்
பகர்ந்திட வளவினிற் படுமோ
கூவியே யுனது குரைகழல் பணிந்தேன்
குறைபொறுத் தாளவந் தருளே. (4)

விண்டுவின் பெருமை பெரிதென வெடுத்து
வியந்துரை தலைமிசைத் தூக்கி

யுண்டுகொல் பிறிதென் றுரைத்திடு வியாத
னுயர்த்திய கையினைப் பெரிய
தண்டுநின் றதுபோ லாக்கிப்பி னண்ட
தற்பர ஞானசிற் பரனே
கண்டுநின் பாத தொண்டுபூண் டுய்யக்
கருணைவைத் தாண்டரு ளாசே. (5)

நாயினுங் கடையே னயினு முன்னை
நாதனே யுலகநா யகனே
தாயினு மினிய கருணைவைத் தாளுந்
தற்பரா னந்தவா ரிதியே
வாயினும் மனத்து மிடைவிடா திருக்கும்
வகையினை யருள்புரிந் தெப்போ
தாயினு மறவா வாழ்வுதந் தாள
வந்தருள் மால்விடை யெழுந்தே. (6

உன்னடி பணியும் நாயினேன் படும்பா
டுனதுள மறிந்திடு மல்லால்
பின்னையா ரறிவார் பேசுதற் குரிமை
பெற்றுளார் பிறிதுயா ருள்ளார்
அன்னையே யனையா யென்னைநீ கைவிட்
டவமதித் திருந்திடி லடியேன்
றன்னையார் காப்பார் தமியனேன் செய்பத்
தக்கது மேதுமிங் குளதோ. (7)

பொன்னையும் மதியேன் பூவைய ரின்பப்
புணர்ப்பையும் மனத்திடை நினையேன்
பின்னையிங் கெவர்தம் புகழையுந் துதியேன்
பேணிமற் றென்றையும் விதியேன்

உன்னையே மதிப்பே னுன்புகழ் துதிப்பே
னுன்புணர்ப் பேமனம் பதிப்பேன்
என்னைநீ கைவிட் டிடினுயிர்த் துணையா
யிருப்பவர் பிறிதிலை யரசே. (8)

இந்நிலத் துன்றன் பெரும்புகழ் பாடி
யிராப்பகல் துதித்திடு மடியேன்
உன்னிலை யறியாப் பாவியா யுள்ளத்
துன்னடி பெற்றிடா துறைந்தால்
எந்நிலத் தவரு மென்னதான் சொல்லா
ரெவர்க்குநா னிக்குறை யுரைப்பேன்
முன்னிலை வருவா யடியனேற் கிரங்கி
முன்னைநா தப்பரம் பொருளே. (9)

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழ்த்துறை

*

## சுந்தரஷண்முகர் துதி.

கலித்துறை.

எண்ணாத வெண்ணங்கள் கோடானு கோடியை யெண்ணி [மனம்
புண்ணாகச் செய்தது போதுமுன் பாதப் புணையினையென்
கண்ணாரக் கண்டு பெருவாழ் வடையக் களிப்படையத்
தண்ணா ரருள்செய்முன் னேசுர ஷண்முக சற்குருவே.

---

பண்டித சி. மாணிக்கத்தியாகராஜக் குருக்கள்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1085
தன்கோவை எண்: 1085

THE VIRAKESARI PRESS,
123. 1st Division
MARADANA,
COLOMBO